**நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**அறந்தாங்கி.**
**முன்னிலை: திரு.எஸ்.சக்திநாராயணமூர்த்தி பி.எஸ்.சி., எல்.எல்.பி.,**
**நீதித்துறை நடுவர், அறந்தாங்கி.**
**2026 ஆம் ஆண்டு, ஜுலை திங்கள் 17 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**
**CC No.72/2015**

| | | |
|---|---|---|
| 1. | **குற்றமுறையீட்டாளர்** | : அரசுக்காக: காவல் ஆய்வாளர், அறந்தாங்கி காவல் நிலையம், அறந்தாங்கி. குற்ற எண்.573/2014. |
| 2. | **குற்றம் சாட்டப்பட்டவர்கள் பெயர் மற்றும் விலாசம்** | : A1. சுப்பிரமணி, த/பெ. சின்னையா.<br>A2. லெட்சுமி, க/பெ.சுப்பிரமணி.<br>A3. முருகேசன், த/பெ. சுப்பிரமணி.<br>**அனைவரின் முகவரி:**<br>பரவாக்கோட்டை, அறந்தாங்கி தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம். |
| 3. | **குற்றம் நடந்த நாள்** | : 20.11.2014 |
| 4. | **புகார் அளிக்கப்பட்ட நாள்** | : 21.11.2014 |
| 5. | **முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள்** | : 21.11.2014 |
| 6. | **குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் கைது செய்யப்பட்ட நாள்** | கைது செய்யப்படவில்லை |
| 7. | **குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் பிணையில் வந்த நாள்** | கைது செய்யப்படவில்லை |
| 8. | **குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள்** | 24.02.2015 |

| | | |
|---|---|---|
| 9. | **குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக வனையப்பட்ட குற்றச்சாட்டு** | இ.த.ச.பிரிவுகள் 294(b), 323, 325, 506(i) of IPC |
| 10. | **குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் பதில்** | : குற்றவாளிகள் இல்லை |
| 11. | **வழக்கு விசாரணை தொடங்கப்பட்ட நாள் மற்றும் முடிக்கப்பட்ட நாள்** | : 18.12.2018–06.05.2026 |

| | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
|---|---|---|
| PW1 | – 18.12.2018 | 13.07.2026 |
| PW2 | – 18.12.2018 | 13.07.2026 |
| PW3 | – 19.05.2023 | 19.05.2023 |
| PW4 | – 27.11.2024 | 27.11.2024 |
| PW5 | – 06.05.2026 | 06.05.2026 |

| | | |
|---|---|---|
| 12. | **நீதிமன்றத்தின் முடிவு** | : 1 முதல் 3 எதிரிகளின் மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 323, 325, 506(i) of IPC–ன் கீழுமான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யபடவில்லை என முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 13. | **வழக்கு சொத்து** | : ஏதுமில்லை. |

இவ்வழக்கு என் முன்பாக இறுதியான விசாரணைக்காக வந்தபோது அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–II அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.M.S.செந்தில்குமார், B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு

வாதங்களை கேட்டறிந்தும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற ஆய்வில் இருந்து இன்று இந்த நீதிமன்றம் வழங்கிடும்....

**<u>தீர்ப்புரை</u>**

அரசு தரப்பில் 1 முதல் 3 எதிரிகளின் மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 323, 325, 506(i) of IPC–ன் கீழும் குற்றஞ்சாட்டப்பட்டு குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

***இனிமுதற்கொண்டு இந்திய தண்டனைச்சட்டம் என்பது இ.த.ச. என்றும், குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் என்பது கு.வி.மு.ச. என்றும் அழைக்கப்படும்.***

**<u>1) அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதியறிக்கையின் சுருக்கம்:</u>**

1.1) கடந்த 20.11.2014–ம் தேதி மதியம் 2.30 மணியளவில் வாதியின் அண்ணன் ரெங்கசாமி மேற்படி வாதியின் வீட்டிற்கு பக்கத்தில் உள்ள கொல்லையில் டிராக்டரை வைத்து உழுதுள்ளார். அப்போது அருகே வந்த எதிரிகள் மூவரும் சாட்சி ரெங்கசாமியை பார்த்து என்னடா புண்ட மகனே தேவுடியா பயலே, யாரோட வயலடா உழுகிறாய் என்று அசிங்கமாகப் பேசியுள்ளனர். அதை பார்த்த வாதி ராஜேந்திரனும், சாட்சி தங்கவேலும், ஏன் இப்படி சண்டைக்கு வருகிறீர்கள் இது எங்களோட கொல்லை தானே என்று கேட்டுள்ளனர். அதற்கு 1–ம் எதிரி என்னங்கடா எதுத்து பேசுறீங்க என்று சொல்லி, கீழே கிடந்த கம்பை எடுத்து சாட்சி தங்கவேலுவின் இடது கையில் அடித்து கொடுங்காயத்தையும், மேலும வாதி ராஜேந்திரனை கம்பால் தலையில் அடித்து சாதாரண காயத்தையும் ஏற்படுத்தியுள்ளார்கள். எதிரிகள் முருகேசனும், லெட்சுமியும் கம்பால் சாட்சி ரெங்கசாமியின் முதுகிலும், வலது கையிலும் அடித்து சாதாரண காயத்தை ஏற்படுத்தியுள்ளனர். மேலும், எதிரிகள் மூவரும் வாதியையும், சாட்சியையும் பார்த்து, இப்போ தப்பிச்சீட்டீங்கடா உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று

கொலைமிரட்டல் செய்துள்ளார். எனவே, 1 முதல் 3 எதிரிகளின் செய்கையானது இ.த.ச.பிரிவுகள் 294(b), 323, 325, 506(i) of IPC–ன் கீழும் தண்டிக்கதக்க குற்றம் என அறந்தாங்கி அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2) வழக்கினை கோப்பிற்கு எடுத்தல், அழைப்பாணை, நகல் வழங்குதல் :**

இந்நீதிமன்றத்தால் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதியறிக்கை மற்றும் வாக்குமூலங்கள், ஆவணங்கள் போன்றவைகளை கவனமாக பரிசீலனை செய்ததில், எதிரிகளுக்கு எதிராக முதல் தோற்ற வழக்கு உள்ளதென இந்நீதிமன்றம் கருதியதால், வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு **கு.வி.மு.ச. பிரிவு 204** இன் கீழ் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது.

அழைப்பாணையின் பேரில் எதிரிகள் ஆஜரானதும், **கு.வி.மு.ச. பிரிவு 207** இன் கீழ் எதிரிகளுக்கு இலவசமாக வழக்கு ஆவணங்கள் வழங்கப்பட்டது.

**3) குற்றச்சாட்டு வனைதல் மற்றும் எதிரிகளின் பதில் :**

பின்பு எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டு, வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்ததில் 1 முதல் 3 எதிரிகளின் மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 323, 325, 506(i) of IPC–ன் கீழும் குற்றச்சாட்டு வனைய போதிய முகாந்திரம் உள்ளதென கருதியதால், எதிரிகள் மீது **கு.வி.மு.ச. பிரிவு 240(1)** இன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டது. மேற்படி குற்றச்சாட்டு குறித்து **கு.வி.மு.ச. பிரிவு 240(2)** இன் கீழ் எதிரிகளிடம் தமிழில் விளக்கி கூறி வினவிய போது, எதிரிகள் பொய் வழக்கு என்று மறுத்துரைத்து வழக்கு விசாரணைக்கு வேண்டுரைத்தனர். எனவே இந்நீதிமன்றமானது **கு.வி.மு.ச. பிரிவு 242(1)** இன் கீழ் அரசு தரப்பு சாட்சியத்திற்கு உத்தரவிட்டது.

**4) அரசு தரப்பு சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் :**

4.1) அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.5** வரையிலான சாட்சியங்களும், **அ.சா.ஆ.1 முதல் 8** வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

4.2) அரசு தரப்பில் **அ.சா.1** ஆக ராஜேந்திரன் என்பவர் விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டும், **அ.சா.2** ஆக ரெங்கசாமி என்பவர் விசாரணை செய்யப்பட்டும், **அ.சா.3** ஆக குழந்தைவேலு என்பவர் விசாரணை செய்யப்பட்டும், **அ.சா.4** ஆக மணிமொழி என்பவர் விசாரணை செய்யப்பட்டு, அ.சா.1–ன் விபத்து பதிவேடு **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்பட்டும், அ.சா.1–ன் காயச்சான்று **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்பட்டும், அ.சா.2–ன் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றானது **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்பட்டும், அ.சா.3–ன் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றானது **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்பட்டும், **அ.சா.5** ஆக மருதமுத்து என்பவர் விசாரணை செய்யப்பட்டும், அவர் மூலம் முதல் தகவல் அறிக்கையானது **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்பட்டும், பார்வை மகஜர் **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்பட்டும், மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.8** ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இல்லை.

**5) கு.வி.மு.ச. பிரிவு 313(1)(b) இன் கீழான வினா மற்றும் எதிரிகள் தரப்பு சாட்சியம்:**

அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை முடிக்கப்பட்டவுடன் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக தோன்றுகின்ற அம்சங்கள் குறித்து எதிரிகளிடம் **கு.வி.மு.ச. பிரிவு 313(1) (ஆ)** இன் கீழ் விளக்கி வினவியபோது, எதிரிகள் பொய் சாட்சி என்றும், எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும்

பதிலுரைத்ததால், எதிரிகள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**6) அரசு தரப்பு சாட்சிய சான்றாவணங்களில் இருந்து தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:**

இவ்வழக்கின் அ.சா.1 ஆன புகார்தாரர் ராஜேந்திரனும், அ.சா.2 ஆன இறந்துபோன பட்டியல் சாட்சியான தங்கவேல் என்பவரும், ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் ஆவார்கள். தங்கவேலுக்கு இராஜேந்திரன் மற்றும் ரங்கசாமி ஆகியோர் மகன்களாக உள்ளனர். இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சிகளாக அ.சா.1 மற்றும் அ.சா.2 இரோஜேந்திரன், ரெங்கசாமி ஆகியோர் விசாரணை செய்யப்பட்டு, அ.சா.1–ன் மூலம் அவர் அளித்த புகார் வாக்குமூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பு பட்டியல் சாட்சியான காயம்பட்ட சாட்சி தங்கவேல் இவ்வழக்கு நிலுவையில் இருக்கும்போது இறந்து விட்டதாக கூறி, இந்நீதிமன்றத்தில் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பார்வை மகஜர் சாட்சியாக அ.சா.3 குழந்தை வேலு என்பவரும், காயம்பட்ட சாட்சிகளுக்கு மருத்துவ சிகிச்சை அளித்த மருத்துவர் மணிமொழி என்பவர் அ.சா.4 ஆகவும் விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலம் இறந்துபோன தங்கவேலு என்பவருக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடு அ.சா.ஆ.2 ஆகவும், காயச்சான்று அ.சா.ஆ.3 ஆகவும், ரெங்கசாமி என்பவருக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.4 ஆகவும், அ.சா.1 இராஜேந்திரனுக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.6 ஆன இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியின் மூலம் முதல் தகவல் அறிக்கை, மாதிரி வரைபடம் ஆகியவை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**7) அரசு தரப்பு மற்றும் எதிரிகள் தரப்பு வாதம்:**

7.1) அரசு தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் தனது வாதத்தில், அரசு தரப்பு வழக்கானது தகுந்த சாட்சிய சான்றாவணங்களின் கீழ் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கின் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஒருவருக்கொருவர் ஒத்து சாட்சியமளித்துள்ளனர் என்றும், இவ்வழக்கின் இறந்து போன பட்டியல் சாட்சி தங்கவேலுக்கு ஏற்பட்ட காயம் குறித்தும், விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று அ.சா.ஆ.2 மற்றும் அ.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கில் காயம்பட்ட மற்றும் நேரடி சாட்சிகளாக அ.சா.1 மற்றும் அ.சா.2 ஒருவருக்கொருவர் ஒத்து சாட்சிமளித்துள்ளனர் என்றும், பார்வை மகஜர் சாட்சியத்தில் எவ்வித முரண்பாடும் இல்லை என்றும், புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தில் எவ்வித முரண்பாடும் இல்லை என்றும், எனவே, எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்கவேண்டும் என்றும் வாதிட்டார்.

7.2) எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் தனது வாதத்தில், அரசு தரப்பு வழக்கானது பொய்யாக ஜோடிக்கப்பட்டுள்ளது என்றும், ஏனெனில் இவ்வழக்கில் அ.சா.1 தான் அளித்த புகார் வாக்குமூலத்தில் விவசாய நிலத்தில் உழுது கொண்டிருந்ததை போய் கேட்டபோது, பிரச்சனை ஏற்பட்டது போன்று புகார் கொடுத்துள்ளார். ஆனால் நீதிமன்ற முதல் விசாரணையில், பஞ்சாயத்து செய்யப்பட்டதாகவும், அப்போது பிரச்சனை ஏற்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக அ.சா.1 ஐ எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது, புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று தனக்கு தெரியாது, அதனை போலிசார் படித்து காண்பிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகளை எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது, முன்பகை உள்ளதை ஒப்புக்கொண்டுள்ளனர். மேலும் இரண்டு சாட்சிகளில் யாரேனும்

வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்தார்களா என்றால், அன்பு மற்றும் கணேசன் ஆகியோர் பார்த்தார்கள் என்று சாட்சியமளித்துள்ளனர். ஆனால் அன்பு மற்றும் கணேசனை நீதிமன்றத்தில் சாட்சியாக விசாரிக்கவில்லை. பாதிக்கப்பட்ட சாட்சியான அரசு தரப்பு பட்டியல் சாட்சிகள் 1 முதல் 3 வரையுள்ள நபர்களுக்கு வழக்கு சம்பவம் நடைப்பெற்றதாக கூறப்படும் வயல் சொந்தமாக உள்ளதா என்பதை காண்பிக்கும் வகையில், அரசு தரப்பில் சான்றாவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. பார்வை மகஜர் சாட்சியாக கூறப்படும் அ.சா.3-ம், அரசு தரப்பிற்கு எதிராகவே சாட்சியமளித்துள்ளார். மருத்துவரின் சாட்சியத்தினை மட்டும் வைத்து அ.சா.1 மற்றும் அ.சா.2, இறந்துபோன தங்கவேலுக்கு ஏற்பட்ட காயத்தை எதிரிகள் தான் விளைவித்தனர் என்று இந்நீதிமன்றத்தால் கருத இயலாது என்றும், எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து, எதிரிகளை விடுதலை செய்யவேண்டும் என்றும் எடுத்துரைத்தார்.

**8) இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரிகள் மீதான இ.த.ச.பிரிவுகள் 294(b), 323, 325, 506(i) of IPC-ன் கீழுமான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா ? என்பதே ஆகும்.**

**9) சாட்சியங்களின் பரிசீலனை மற்றும் பகுப்பாய்வு:**

10) இருதரப்பு வாதங்களும் வழக்கின் சாட்சியங்களும், சான்றாவணங்களும் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது.

11) இவ்வழக்கில் அ.சா.1 ஆன இராஜேந்திரன் என்பவர் கடந்த 20.11.2014-ம் தேதி மதியம் 02.30 மணியளவில் எதிரிகள் அ.சா.1-ன் வீட்டிற்கு பக்கத்தில் உள்ள வயலை டிராக்டரை வைத்து உழுததாகவும், அப்போது அ.சா.1 முதல் 3 வரையிலான சாட்சிகள் ஏற்கனவே பிரச்சனை உள்ளபோது ஏன் இதுபோன்று உழுகிறீர்கள் என்று கேட்டபோது, அப்போது 1 முதல் 3 எதிரிகள் தாக்கியதாக கூறப்பட்டுள்ளது. இதுவே

புகார் வாக்குமூலமான அ.சா.1–ல் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் ஆகும். அ.சா.1 தனது முதல் விசாரணையில் கீழ்கண்டவாறு சாட்சியமளித்துள்ளார்.

> *“நான் பரவாக்கோட்டை கிராமத்தில் குடியிருந்து வருகிறேன் என்றும், தான் ஆசாரி வேலை செய்து வருகிறேன் என்றும், எதிரிகளை தனக்குத் தெரியும் என்றும், 1 வது எதிரி என்னுடைய சித்தப்பா ஆவார் என்றும், 2 மற்றும் 3 எதிரிகள் அவருடைய மனைவி மற்றும் மகன் ஆவார் என்றும், கடந்த 20–11–2011 ஆம் தேதி மதியம் 2.30 மணியளவில் பரவாக்கோட்டையில் உள்ள என்னுடைய வீட்டில் இருந்த போது என்னுடைய அண்ணன் மற்றும் தந்தை இருவரும் வயலுக்கு உழுவ சென்று விட்டார்கள் என்றும், அப்போது நானும் கொல்லைக்குச் சென்றபோது எங்கள் குடும்பத்தாருக்கும் எதிரிகள் குடும்பத்தாருக்கும் ஏற்கனவே இடம் சம்மந்தமாக பிரச்சினை இருந்து வந்ததால் அதனை தீர்க்கும் பொருட்டு ஊர் முக்கியஸ்தர்களிடம் சொன்னோம் என்றும், அதன் பொருட்டு அவர்கள் பஞ்சாயத்து பேசியதில் எதிரிகள் மூன்று பேரும் பஞ்சாயத்திற்கு வந்திருந்தார்கள் என்றும், அப்போது பஞ்சாயத்தில் சொன்ன போது அதனை கேட்காமல் எதிரிகள் எங்களை அசிங்கமாகப் பேசினார்கள் அதனை நான் ஏன் இவ்வாறு பேசுகிறீர்கள் என்று கேட்ட போது எதிரிகள் மூவரும் சேர்ந்து கம்பைக் கொண்டு என்னுடைய அப்பாவை தாக்கினார்கள் என்றும், அதில் என்னுடைய தந்தையாருக்கு தலை மற்றும் கையில் காயம் ஏற்பட்டது என்றும், எதிரிகள் தாக்கியதில் எனக்கும் தலையில் காயம் ஏற்பட்டது என்றும், என்னுடைய அண்ணனான ரெங்கசாமி என்பவருக்கும் இடது கையில் காயம் ஏற்பட்டது என்றும், பின்பு 108*

***ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து நாங்கள் மூவரும் அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தோம் என்றும், என்னுடைய தந்தையார் ஒரு வாரம் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார் என்றும், நான் நான்கு நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன் என்றும், பின்பு மேல் சிகிச்சைக்காக என்னுடைய தந்தையார் மற்றும் அண்ணன் இருவரும் புதுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்கள் என்றும், என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், புகாரில் உள்ள விபரங்கள் தனக்கு தெரியும் என்றும், புகார் அ.சா.ஆ.1 ஆகும்."***

12) மேற்படி சாட்சியத்தின்படி, அ.சா.1 20.11.2014–ம் தேதி மதியம் 02.30 மணியளவில் பரவாக்கோட்டையில் உள்ள அவரது வீட்டில் இருந்த போது அ.சா.2 ஆன அவரது அண்ணன், இறந்துபோன பட்டியல் சாட்சியான தங்கவேல் மூவரும் உழுவ சென்றதாகவும், அப்போது அ.சா.1–ன் குடும்பத்தாருக்கும், எதிரிகள் குடும்பதாருக்கும் ஏற்கனவே, இடப்பிரச்சனை இருந்து வந்ததால், அதனை தீர்க்கும்பொருட்டு ஊர் முக்கியஸ்தர்களிடம் பேசி, பஞ்சாயத்து நடைப்பெற்றதாகவும், பஞ்சாயத்தில் கேட்காமல் எதிரிகள் அசிங்கமாக பேசியதாகவும், அப்போது ஏன் இவ்வாறு பேசுகிறீர்கள் என்று கேட்டபோது, எதிரிகள் மூவரும் கம்பை எடுத்துக்கொண்டு, அ.சா.1–ன் தகப்பனாரையும், சகோதரரையும், அ.சா.1 ஐயும் தாக்கியதாக கூறப்பட்டுள்ளது. ஆனால் புகார் வாக்குமூலத்தில் 20.11.2014–ம் தேதி ஏற்கனவே சொத்து பிரச்சனை இருந்து வரும் நிலையில், கொல்லையை உழுவ சென்ற போது, அங்கே வந்த எதிரிகள் பிரச்சனை செய்ததாக கூறப்பட்டுள்ளது. எனவே, இவ்வழக்கின் அ.சா.1 புகார் வாக்குமூலத்திற்கும், முதல் விசாரணைக்கும் முரண்பட்டு சாட்சியமளித்துள்ளார்.

13) அ.சா.1 ஐ எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது, ***அவர் உழுததாக கூறப்படும் நிலத்தின் ஆவணங்களை போலிசாரிடம் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். உழுத நிலம் எதிரிகளுக்கு சொந்தமானது என்று அவர்கள் கேட்டார்கள் என்றால், சரிதான். வழக்கு சம்பவத்தன்று வழக்கு சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக யாரேனும் உள்ளார்களா என்றால், ஆமாம். அன்பு மற்றும் கணேசன் ஆகியோர் பார்த்தார்கள். போலிசார் என்னிடம் வழக்கு சம்பவத்தை பற்றி விசாரித்தார்களா என்றால் இல்லை. வழக்கு சம்பவம் குறித்து போலிசார் எதுவும் மருத்துவமனையில் எழுதிக்கொண்டார்களா என்றால், ஆமாம் எழுதினார்கள். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். போலிசார் என்னிடம் படித்து காண்பிக்கவில்லை. நான் போலிசாரிடம் ஏதேனும் கையொப்பம் செய்து கொடுத்தேனா என்றால், இல்லை*** என்று சாட்சியமளித்துள்ளார்.

14) மேற்படி சாட்சியத்தில் இருந்து, அ.சா.1 தான் அளித்த புகார்வாக்குமூலத்தையே மறுத்து சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 மற்றும் அ.சா.2–க்கு வழக்கு சம்பவம் நடைப்பெற்றதாக கூறப்படும் நிலம் சொந்தமாக இருந்திருந்தால் ஏன் அவர்கள் அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் சான்றாவணமாக தாக்கல் செய்யவில்லை என்பதற்கான விளக்கத்தினை அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் அளிக்கவில்லை. வழக்கு சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக அன்பு மற்றும் கணேசன் ஆகிய நபர்களின் பெயர்களை அ.சா.1 சொல்லியிருந்தும், ஏன் அரசு தரப்பில் சாட்சிகளாக சேர்த்து விசாரணை செய்யவில்லை. அ.சா.2–ம் புகார் வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று சாட்சியமளித்துள்ளார். மேற்படி அ.சா.2 ஐ எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது, ஏற்கனவே, நிலப்பிரச்சனை இருந்து வருவதையும், உரிமையியல் நீதிமன்றத்தில் எவ்வித தடையும் இல்லை என்பதையும் ஒப்புக்கொண்டுள்ளார். அ.சா.3 ஆன பார்வை மகஜர் சாட்சி நான் கையொப்பம்

செய்ததில் போலிசார் ஏதேனும் எழுதியிருந்தார்களா என்றால், சரியாக கவனிக்கவில்லை என்று மிகவும் சாதாரணமாக சாட்சியமளித்துள்ளார்.

15) அ.சா.4 மருத்துவர் சாட்சியத்தின்படி அ.சா.1 மற்றும் அ.சா.2–க்கும், இறந்து போன தங்கவேல் என்பவருக்கும் காயம் ஏற்பட்டதாக இந்நீதிமன்றத்தால், சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு ஐயமில்லாமல் நம்பும் வகையில் மற்ற சாட்சிகள் இருந்தால் மட்டுமே, மருத்துவ சாட்சியத்தை வைத்து மற்ற சாட்சிகளின் உறுதியூட்டல் மூலம் இந்நீதிமன்றத்தால் வழக்கு சம்பவம் நடைப்பெற்றதாக முடிவு செய்ய இயலும். வழக்கின் புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தினை மட்டும் வைத்துக்கொண்டு, மருத்துவ சான்றின் அடிப்படையில் எதிரிகளை தண்டிக்க இயலாது.

16) எனவே, இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 புகார் வாக்குமூலத்தில் வழக்கு சம்பவம் வயலில் நடந்ததாகவும், தனது முதல் விசாரணையில், பஞ்சாயத்து பேசிக் கொண்டிருந்தபோது நடைப்பெற்றதாகவும், புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று தெரியாது என்றும், போலிசார் படித்து காண்பிக்கவில்லை என்றும், வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்படாததும், வழக்கு சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக அ.சா.1 அன்பு மற்றும் கணேசன் பெயரை சொல்லியிருந்தும், அவர்கள் சாட்சியாக சேர்க்கப்பட்டு, விசாரணை செய்யப்படாததும், பார்வை மகஜர் சாட்சி அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளதும், ஏற்கனவே, எதிரிகளுக்கும், அ.சா.1–ன் குடும்பத்திற்கும் முன் பகை உள்ளது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது போன்றவற்றினால், இந்நீதிமன்றத்தினால் அ.சா.4 ஆன மருத்துவரின் சாட்சியத்தை மட்டும் வைத்து கொண்டு, மருத்துவ சான்றில் உள்ள காயங்களுக்கான குற்றத்தினை எதிரிகள் தான் செய்தனர் என்று இந்நீதிமன்றத்தால் அ.சா.4 மற்றும் அ.சா.5 சாட்சியத்தினை மட்டும் வைத்து, எதிரிகளை தண்டிக்க இயலாது. எனவே, 1 முதல் 3 எதிரிகளின் மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 323, 325, 506(i)

of IPC–ன் கீழுமான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பால் தகுந்த சாட்சிய சான்றாவணங்களின் அடிப்படையில் சரிவர நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை விடுதலை செய்யலாம் என இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**இறுதியாக,** 1 முதல் 3 எதிரிகளின் மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 323, 325, 506(i) of IPC–ன் கீழுமான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யபடவில்லை என முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

அ) வழக்கு சொத்து ஏதும் இல்லை. எனவே, வழக்கு சொத்து குறித்த எவ்வித உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

ஆ) இந்த வழக்கில் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பிறகு எதிரிகளால் எழுதி கொடுக்கப்பட்ட பிணையப் பத்திரம் ரத்து செய்ய உத்தரவிடப்படுகின்றது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு பின் அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்த பின்னர் இன்று 2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 17 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**

**<u>சாட்சி மற்றும் சான்றாவணப்பட்டியல் :</u>**

**<u>அரசு தரப்பு சாட்சிகள் :</u>**

**அ.சா.1** : ராஜேந்திரன்

**அ.சா.2** : ரெங்கசாமி

**அ.சா.3** : குழந்தைவேலு

**அ.சா.4** : மணிமொழி

**அ.சா.5** : மருதமுத்து

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள் :</u>**

**அ.சா.ஆ.1** : புகார் வாக்குமூலம்

**அ.சா.ஆ.2** : அ.சா.1–ன் விபத்து பதிவேடு

**அ.சா.ஆ.3** : அ.சா.1–ன் காயச்சான்று

**அ.சா.ஆ.4** : அ.சா.2–ன் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று

**அ.சா.ஆ.5** : அ.சா.3–ன் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று

**அ.சா.ஆ.6** : முதல் தகவல் அறிக்கை

**அ.சா.ஆ.7** : பார்வை மகஜர்

**அ.சா.ஆ.8** : மாதிரி வரைபடம்

**<u>சான்று பொருள் :</u>** இல்லை.

**<u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>** இல்லை.

**<u>பின்குறிப்பு :</u>**

1. இவ்வழக்கில் சாட்சிகள் விசாரணைக்காக 3 தினங்களுக்கு மேலாக நிறுத்தி

வைக்கப்படவில்லை.

2. வழக்கின் எதிரிக்கு விசாரணையின்போது பிணையில் இருந்தார்.
3. வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு அறிவிக்கப்பட்டது.

**ஒம்/–எஸ்.சக்திநாராயணமூர்த்தி,**
**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**

**//உண்மை நகல்//**

SAKTHINARAYANA MOORTHI S
Digitally signed by SAKTHINARAYANA MOORTHI S
Date: 2026.07.17 04:50:11 +0530

**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**